பக்கங்கள்: 08

காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2051 | ஆடி 11 | ஞாயிற்றுக்கிழமை | 26.07.2020 | கதிர் 130

# நல்லாட்சி அரசும் ராஜபக்ஷ அரசும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்

## போட்டுத் தாக்குகின்றார் ஞானசாரர்



கொழும்பு, ஜூலை 26

முன்னைய நல்லாட்சி ஆட்சியாளர்களைப் போன்று ராஜபக்ஷ அரசும் குறுகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு செயற்படுகின்றது. இந்த இரண்டு அரசுகளும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்.

-இவ்வாறு கடுமையாகச்சாடியுள்ளார் பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிடம்

2

# 5,600 போதை வில்லைகளுடன் கொழும்பில் இருவர் சிக்கினர்

கொழும்பு, ஜூலை 26

கொழும்பிலுள்ள கலதாரி ஹோட்டலுக்கு அருகில் 2.4 கிராம் ஹெரோயின் மற்றும் 5 ஆயிரத்து 600 போதை மாத்திரைகளுடன் இருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் புறக்கோட்டை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து, குறித்த பகுதியில் நேற்றுப் பிற்பகல் 1.50 மணியளவில் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது. இதன்போது, ஹெரோயின் மற்றும் போதை மாத்திரைகளுடன் இச்சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

வத்தளை மற்றும் அங்கொடை பிரதேசங்களைச்

2

# அரச அதிகாரிகள் பக்கச்சார்பு: நீதியான தேர்தலுக்குப் பாதிப்பு

## பவ்ரல் அமைப்பு குற்றச்சாட்டு

**கொழும்பு, ஜூலை 26**

**அரச அதிகாரிகள் பக்கச்சார்பான விதத்தில் நடந்துகொள்கின்றார்கள் என்று சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பு (பவ்ரல்) குற்றஞ்சாட்டியுள்ளது.**

2

# 39 பக்கத்தில் விக்கி அணி விஞ்ஞாபனம்



வவுனியா, ஜூலை 26

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்று வெளியிட்டு வைக்கப்பட்டது.

வவுனியா நகர சபை மண்டபத்தில் நடந்த நிகழ்வில் 39 பக்கங்களைக் கொண்ட தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்டது.

கூட்டணியின் தலைவர் க.வி.விக்னேஸ்வரன், பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் சுரேஷ் பிரேமச்சந்திரன், சிறிகாந்தா ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

# மாகாண சபை முறைக்கு உடன் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்

## மிலிந்த மொறகொட வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 26

பொதுமக்களின் நாளாந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வைக் காண்பதற்காக மாகாண சபை முறைமையை உடனடியாக நீக்கவேண்டும்; உள்ளூராட்சி சபைகளை வலுப்படுத்த வேண்டும்.

- இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொறகொட கோரிக்கை விடுத்துள்ளார்.

கொரோனா வைரஸுக்குப் பின்னரான உலகத்தைக் கையாள்வதற்கு இலங்கைக்கு வலுவான நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை அவசியம் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2




## நல்லாட்சி அரசும் ராஜபக்ஷ அரசும் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தை அபிவிருத்தி செய்யும் பொறுப்பை ஒப்படைப்பதற்கு அவர் கடும் எதிர்ப்பையும் வெளியிட்டுள்ளார்.

கிழக்கு கொள்கலன் முனையத்தை இந்திய நிறுவனத்திடம் ஒப்படைப்பதற்கான திட்டம் இந்த அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ முன்வைத்துள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விவகாரம் குறித்து ஜனாதிபதியுடன் பேச்சுகளை மேற்கொள்வதற்குத் தொழிற்சங்கத்தினருக்கு அனுமதி வழங்கப்படவில்லை எனவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கிழக்கு கொள்கலன் முனையத்தின் 49 வீதத்தை இந்திய நிறுவனத்திடம் ஒப்படைப்பதற்கும் அரசு திட்டமிட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பெயர் தெரியாத இரு நிறுவனங்களுக்கு 51 வீதத்தை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

நிறுவனங்களின் பெயர்கள் தெரியாமல் எப்படி அமைச்சரவைப் பத்திரத்தைத் தயாரிக்கலாம் எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

பழைய வழிமுறைகளைப் பின்பற்றக்கூடாது என்பதற்காகவே இந்த அரசுக்கு மக்கள் அதிகாரத்தை வழங்கினார்கள் என்று தெரிவித்துள்ள ஞானசார தேரர், எனினும் இந்த அரசும் முன்னைய அரசு போலவே செயற்படுகின்றது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## மாகாண சபை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொரோனா வைரஸின் ஆரம்ப நாள்களில் வலுவான நிறைவேற்று அதிகாரத்தின் தீர்மானம் எடுத்தல் காரணமாக நாடு நன்மையடைந்தது என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. இதன் காரணமாகப் பல உயிர்கள் காப்பாற்றப்பட்டன.

தீர்க்ககரமான விதத்தில் செயற்படும் ஆனால் இறுதியில் நாடாளுமன்றத்துக்குப் பதிலளிக்கும் கடப்பாடு உள்ள வலுவான நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஏற்படுத்துவது குறித்து சிந்தனை ஆற்றலுடைய இலங்கையர்கள் அனைவரும் ஆராய வேண்டும்; கலந்துரையாட வேண்டும்; பபரப்புரை செய்யவேண்டும்.

அனைத்து இலங்கையர்களாலும் தெரிவு செய்யப்படுபவர் ஜனாதிபதி மாத்திரமே. இந்தப் பதவியில் உள்ளவர் அனைத்துப் பிரஜைகளுக்கும் பதிலளிக்கும் கடப்பாடு உள்ளவராகக் காணப்பட வேண்டும்.

பொதுமக்களின் நாளாந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பதற்காக மாகாண சபை முறைமையை உடனடியாக நீக்கவேண்டும். உள்ளூராட்சி சபைகளை வலுப்படுத்த வேண்டும் - என்றார்.

## அரச அதிகாரிகள் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சில உயர் அரச அதிகாரிகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் கட்சிகளினதும் வேட்பாளர்களினதும் பரப்புரை நடவடிக்கைகளில் பங்கெடுப்பது குறித்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று பவ்ரல் அமைப்பின் நிறை வேற்றுப்பணிப்பாளர் ரோகன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல் வாக்களிப்பு நிலையம் மற்றும் வாக்குகள் எண்ணப்படும் நிலையங்களில் முக்கிய பதவிகளை வகிக்கக் கூடியவர்கள் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொள்வதும் ஆதரிப்பதும் சுதந்திரமான நீதியான தேர்தலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தலாம்.

தேர்தல் ஆணைக்குழு மேற்பார்வை மற்றும் நிறைவேற்று தரத்தில் உள்ள அதிகாரிகள் பரப்புரையில் ஈடுபடக்கூடாது; வேட்பாளர்களை ஆதரிக்கக் கூடாது. ஆனால், விதிமுறை மீறப்படுகின்றது.

இந்த விதிமுறையை மீறும் அதிகாரிகள் சுதந்திரமான - நீதியான தேர்தலுக்கு உதவ வேண்டும் - என்றார்.

## 5,600 போதை ..............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சேர்ந்த 20, 29 வயதுடைய சந்தேக நபர்களே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை புறக்கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்துவதற்கான நடவடிக்கையை பொலிஸார் எடுத்துள்ளனர்.

சந்தேகநபர்களிடம், புறக்கோட்டை பொலிஸார் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622

காலைக்கதிர் Kalaikkathir
பத்திரிகைத்துறை வெற்றிடங்கள்
☛ உதவி ஆசிரியர்
☛ ஒப்பு நோக்கர்கள்
முன் அனுபவம் உள்ளவர்களுக்கு
முக்கியத்துவம் வழங்கப்படும்
தொடர்புகளுக்கு -
காலைக்கதிர்
இல - 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
076 443 8622



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000

மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# வாக்குகளை வீணாக்காதீர்!

வரப்போகின்ற தேர்தலில் தமிழர் தரப்பில் இருக்கின்ற பிளவு பெரிய விடயமாக – பாதிப்பாக – தோற்றுப் போகின்றது.

விளக்கம், வியாக்கியானம் தெரியாமல் பிளவுற்று நின்று, பொதுத் தேர்தலில் முரண்பட்டு மோதி, 'குரங்கு அப்பம் பங்கிட்ட' கதையாகத் தமிழர் பிரதிநிதித்துவத்தைத் தென்னிலங்கைத் தரப்புகளிடம் தாரைவார்க்கும் அலங்கோலம் அரங்கேறப் போகின்றது. அதனைத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எச்சரிக்கையாகத் தமிழர் தரப்புக்குத் தெரிவித்திருக்கின்றார்.

"யாழ்ப்பாணம் மட்டும்தான் தமிழ்த் தேசம் என நினைப்பவர்களை முதலில் தள்ளி வைத்து விடுங்கள், கிழக்கு எந்தப் பக்கம் இருக்கின்றது என்று தெரியாமல் போட்டியிட்டுத் தேசியம் பேசுகின்றவர்கள் சிலர் இருக்கின்றனர். இவர்கள் கிழக்கில் மட்டுமல்ல, வன்னியிலும் ஐந்து வீதத்தைக் கடக்க மாட்டார்கள்." என்று சுமந்திரன் பேசியமையில் அர்த்தம் உள்ளது.

ஜனநாயகத் தேர்தலில் யாரும் போட்டியிடலாம். வாக்குரிமை உள்ள எவரும் தேர்தல் களத்தில் நிற்கலாம். அதில் தப்பில்லை. அந்த அடிப்படை உரிமை ஒவ்வொரு வாக்காளனுக்கும் உண்டு.

ஆனால், அந்த உரிமையைப் பிரயோகிக்கின்றோம் என்ற பெயரில் இன இழப்புக்கு நாம் துணை போய் விடக் கூடாது. அதுவும் தற்போதைய விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறை மிகமிக விசித்திரமானது. அதன் தாற்பரியங்கள், தாக்கங்களைப் புரிந்து கொள்ளாமல், எடுத்தோம், கவிழ்த்தோம் என்று விடயங்களைக் கையாள முயலக் கூடாது.

உதாரணமாக திகாமடுல்ல மாவட்டத்தை எடுத்துக் கொள்வோம். அங்கு சிங்கள, முஸ்லிம் வாக்குச் செறிவுக்கு மத்தியில் தமிழர்கள் ஓர் ஆசனத்தை வெல்வது என்பதே மணலைக் கயிறாகத் திரிக்கும் பணிக்கு ஒப்பானது.

அந்தத் தமிழர் பிரதிநிதித்துவ வாய்ப்பைச் சிதறடிக்கும் வகையில் அம்பாறை தமிழர் மகா சபை என்ற பெயரில் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) ஓர் அணியாக அங்கு களமிறங்கியிருக்கின்றார். தமிழர்களின் கணிசமான வாக்கைப் பிரித்தால் அம்பாறையில் தமிழ்க் கூட்டமைப்புக்கும் இடமில்லை, தமிழர் மகா சபைக்கும் இடமில்லை என்ற நிலைமைதான் ஏற்படும்; ஏற்பட்டுள்ளது.

இதைத்தான் யாழ்ப்பாணத்திலும், வடக்கு, கிழக்கிலும் செய்கின்றார்கள். அதைத் தமிழ் மக்கள் கவனத்திலும், சிந்தையிலும் கொள்ள வேண்டும் என்கின்றார் சுமந்திரன்.

ஐந்து வீத வாக்குகளைக் கூட மாவட்ட ரீதியில் பெற முடியாத பல தரப்புகள் தேர்தல் களத்தில் நிற்கின்றன. இந்தத் தரப்புகளுக்கு அளிக்கப்படக் கூடிய வாக்குகள் நாடாளுமன்ற உறுப்பினரைத் தெரிவு செய்யும் கணக்கெடுப்பில் உள்வாங்கப்படாமல் புறமொதுக்கப்பட்டு வீணாகும் அவலத்தையே அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

இவ்வாறு வடக்கு, கிழக்கில் தமிழர்களுடைய வலிமையுள்ள வாக்குகள் அவமே சிதறடிக்கப்பட, எஞ்சிய வாக்குகளினால் தமிழ்த் தேசியம் சாராத தென்னிலங்கைக் கட்சிகளும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைச் சூறையாடி விடும் ஆபத்து உள்ளது.

வடக்கு மாகாணத்தில், யாழ் மாவட்டத்தில் கடந்த தடவை அது நேர்ந்தமை அனுபவ ரீதியாகப் பட்டுணர்ந்த உண்மை.

பதினையாயிரம் வாக்குகளைப் பெற்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்குக் கடந்த தடவை ஏழு வாக்குகள் குறைவாக வீழ்ந்திருந்தால் விகிதாசரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் யாழ் மாவட்டத்தின் ஏழாவது ஆசனம் ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சென்றிருக்காது. மாறாக ஐந்து ஆசனங்களைப் பெற்ற கூட்டமைப்பின் நிலைமை ஆறு ஆசனங்களாகியிருக்கும்.

ஆக, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு அளிக்கப்பட்ட 15 ஆயிரம் வாக்குகள் கடந்த தடவை அவமாயிற்று. அவற்றின் மூலம் ஒரு எம்.பியைத் தெரிவு செய்யவும் முடியவில்லை. அதே நேரம் தமிழ்த் தேசியம் பேசும் தரப்புக்குப் போகக் கூடிய ஓர் ஆசனத்தை அது இழக்கச் செய்து, தென்னிலங்கை சிங்களக் கட்சியின் கரத்தை அது பலப்படுத்தியது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வேண்டுமென்று செய்த வேலையல்ல இது. அவர்கள் குறைந்த பட்சம் ஓர் எம்.பியையாவது பெற முயன்றார்கள். அது தப்பில்லை. கணக்கெடுப்பின் போது பாரிய நிலை மாற்றத்தை அந்த வாக்குகள் – அந்தக் கட்சிக்கு வீழ்ந்த வாக்குகள் – ஏற்படுத்தி விட்டன. அவர்களுக்கும் ஆசனம் இல்லாமல், தமிழ்த் தேசியம் பேசும் கூட்டமைப்புக்கும் கிடைக்க விடாமல், சிங்களக் கட்சிக்கு ஓர் எம்.பி. ஆசனத்தை அது பெற்றுக் கொடுத்து விட்டது.

இதனால்தான் ஐந்து வீதத்துக்குக் குறைவாக வாக்கெடுத்து, அதனால் கணக்கெடுப்பில் இருந்து ஒதுக்கப்படும் கட்சிகளை அல்லது ஓர் ஆசனத்தைக் கூட எடுக்க முடியாத தரப்புகளை ஆதரித்து வாக்குகளை வீணடிக்க வேண்டாம் என்று கோரப்படுகின்றது.

அது வாக்காளர்களுக்குப் புரிந்தால் சரி.

# கடைசித் தமிழன் இருக்கும்வரை தமிழனுக்கே இலங்கை சொந்தம்

## கூட்டமைப்பின் மட்டு. வேட்பாளர் சாணக்கியன் சூளுரை




கடைசித் தமிழன் இந்த நாட்டில் வாழும் வரை இந்த நாடு தமிழனுக்குச் சொந்தமானது. இது சிங்கள பௌத்த நாடு என்பதை ஒரு போதும் ஏற்றுக்கொள்ளமாட்டோம்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டக்களப்பிலுள்ள தனியார் விடுதியொன்றில் நேற்றிரவு நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குறுகிய அரசியல் இலாபத்துக்காக எனது தாயை விமர்சித்து இணையத்தளங்களிலும் சமூக ஊடகங்களிலும் பிரசாரம் செய்கிறார்கள். எனது தாயின் பிறப்பை நியாயப்படுத்த வேண்டிய கடமை எனக்குள்ளது. எனது தாய்க்குக் களங்கம் ஏற்படுத்த ஒருபோதும் நான் இடமளிக்கமாட்டேன்.

என்னுடைய தாயின் பெயர் குமாரி தேவிகா. அவருடைய தந்தை பழனியப்பாபிள்ளை பாலகிருஸ்ணன். அவர் யாழ்ப்பாணம், மானிப்பாய் கிராமத்தைச் சேர்ந்தவர். எனது அம்மாவின் அம்மா போலின் டயஸ். அவர் போத்துக்கேயர். என்னுடைய நிறத்துக்குக் காரணம் அவர்தான். இந்த நாட்டின் சட்டத்தின்படி எனது தாய் இலங்கைத் தமிழர்.

அரசியலுக்காகத் தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக ஒருவருடைய பிறப்பைப் பற்றிக் கேவலமாகப் பேசுவது கேவலமான செயலாகும். தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்றால் நீங்கள் செயற்படுத்தவுள்ள திட்டங்களை மக்களிடம் கூறி வாக்குகளைப் பெற்றுக்கொள்ளுங்கள். என்னைப் பற்றி ஒரு பொய் கூறும்போது அதைக் கூறுபவர்கள் பற்றி பல உண்மைகள் வெளிவரும். கண்ணாடி வீட்டுக்குள் இருந்து யாரும் கல்லெறிய வேண்டாம்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி இளைஞர் ஒருவனுக்குத் தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் வழங்கியது தவறா? தமிழரசுக் கட்சியின் சார்பில் இளைஞர் நாடாளுமன்றம் செல்லக் கூடாதா? எனது கரங்கள் சுத்தமானவை; இரத்தக்கறை படிந்த கரங்களல்ல. எனது செயற்பாடுகள் சரியாக இருந்தால் மக்கள் என்னை ஏற்றுக்கொள்வார்கள்.

எமது இனத்தின் உரிமைக்காக என்றுமே குரலெழுப்புவேன். என்னை முழுமையாக நம்புங்கள். என் இறுதி மூச்சுவரை இலங்கைத் தமிழரசுக் கட்சியிலே பயணிப்பேன். கடைசித் தமிழன் இந்த நாட்டில் வாழும்வரை இந்த நாடு தமிழனுக்குச் சொந்தமானது. இலங்கை சிங்கள பௌத்த நாடு என என்னுடைய கட்சியும் ஏற்றுக்கொள்ளாது; நானும் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டேன்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 304 நான்கு வேட்பாளர்கள் போட்டியிட்டாலும் அதிகமான மேடைகளில் என்னைத்தான் விமர்சனம் செய்கிறார்கள். இதனை அவதானிக்கும்போது என்னுடைய வெற்றி உறுதிசெய்யப்பட்டுள்ளது.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் இந்த அரசின் செயற்றிட்டத்தை எதிர்க்கின்ற வாக்குகளாகவே அமைய வேண்டும். தமிழ் மக்களின் உரிமையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் மாத்திரமே பெற்றுக்கொடுக்க முடியும்.

2015ஆம் ஆண்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் 7 ஆயிரம் வாக்குகளினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு தமிழ் பிரதிநிதித்துவத்தை இழந்தோம். இம்முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நான்கு உறுப்பினர்கள் நாடாளுமன்றம் செல்ல வாக்களியுங்கள் – என்றார். (22)

# கொரோனா தொற்று எண்ணிக்கை 2,770 ஆகியது

கொழும்பு, ஜூலை 26

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மொத்த நோயாளிகளின் எண்ணிக்கை 2,770 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று மாத்திரம் 9பேர், கொரோனா வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சின் ஊடக தகவல்கள் குறிப்பிடுகின்றன.

மேலும் அடையாளம் காணப்பட்டவர்களில் 656பேர் தொடர்ந்தும் வைத்தியக் கண்காணிப்பில் உள்ளனர் எனவும் சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை 2103 பேர் பூரண குணமடைந்து வீடுகளுக்கு திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் முப்படையினர் ஊடாக முன்னெடுக்கப்படும் 44 தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் 4 ஆயிரத்து 606 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்றினால் இலங்கையில் இதுவரை 11பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாளை முதல் மீள ஆரம்பிக்கும் பாடசாலைகள்!

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக விடுமுறையளிக்கப்பட்டிருந்த பாடசாலைகளை நாளை முதல் மீள திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாளைய தினம் 5ஆம் 11ஆம் தர மாணவர்கள் மற்றும் உயர்தர தரங்களில் கல்வி பயிலும் மாணவர்கள் மாத்திரமே பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படவுள்ளனர் என அந்த அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் காலை 7.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரையில் மேற்கொள்ளப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், ஏனைய தரத்தில் பயிலும் மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் தேர்தலுக்குப் பின்னர், ஓகஸ்ட் 10 ஆம் திகதி முதல் ஆரம்பமாகும் எனவும் கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் பொதுத்தேர்தலில் வாக்களிப்பு நிலையங்களாக பயன்படுத்தப்படவுள்ள பாடசாலைகளை தயார்படுத்துவதற்காக குறித்த பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் உப அதிபர்கள் எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதிவரை பாடசாலைகளுக்கு சமுகமளிக்க வேண்டும் என கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த நாட்களில் மாணவர்களின் கல்வி செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் தேர்தல் பணிகளை முன்னெடுக்குமாறும் அதிபர்களுக்கு கல்வி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நாங்கள் இணங்கச் செய்யும் ஒரு தீர்வுக்கு சிங்கள மக்களைக் கொண்டு வருவோம்!

## – விக்னேஸ்வரன் கூறுகின்றார்



## இன்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு உரை

"எமது அணுகுமுறை என்னவென்றால் சிங்கள மக்கள் இணங்கும் ஒரு தீர்வை அல்ல, சிங்கள மக்களை நாம் இணங்கச்செய்யும் ஒரு தீர்வினை நாம் பெறுவதும் பெற்றுக் கொள்வதுதான். அதற்காகத்தான் நான் எதற்கும் அஞ்சாமல் எமது பூர்வீகம், வரலாறு, எமது சுயநிர்ணய உரிமை, நாம் ஏன் ஒரு தேசம், நாம் ஏன் சிங்களவர்களை விட இந்த நாட்டுக்கு கூடுதல் சொந்தக்காரர் என்பவற்றை எல்லாம் கூறிவருகின்றேன். அவ்வாறு கூறியதால்தான் இரண்டு நாள்களுக்கு முன்னர் பொலிஸார் வந்து என்னைக் கேள்வி கேட்டனர்."

– இவ்வாறு தெரிவித்தார் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும், தமிழ் மக்கள் பேரவை இணைத் தலைவரும், தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும், வடமாகாண முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு கருத்துப் பரப்புரை செய்யும் பொதுக் கூட்டம் இன்று வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நடைபெற்றபோது அங்கு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:–

தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்ட வரலாற்றில் வரலாற்று முக்கியத்துவம் மிக்க ஒரு தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிட்டுவைக்கப்படும் நாளாக இன்றைய நாள் அமைகின்றது. இன்றைய நாள் மிகவும் ஒரு முக்கியமான செய்தியை அரசாங்கத்துக்கும் சர்வதேச சமூகத்துக்கும் தமிழ் மக்கள் சொல்லுகின்ற ஒரு நாளாக அமைகின்றது. தொடர்ந்தும் எமது மக்களுக்கு எதிராக ஓர் இனப்படுகொலை நிகழ்த்தப்பட்டுவருகின்ற நிலையிலும், எட்டப்பட்ட எல்லா ஒப்பந்தங்களுமே அரசாங்கங்களினால் தொடர்ச்சியாகக் கிழித்து எறியப்பட்டுவருகின்ற நிலையிலும், இனப்பிரச்சினை என்ற ஒன்றே இந்த நாட்டில் இல்லை என்று தற்போதைய அரசாங்கம் குருட்டுத்தனமான பொறுப்பற்ற கருத்துக்களை முன்வைத்துவரும் நிலையிலும், எமது பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வினை அடையும்பொருட்டு ஒரு கருத்துக்கணிப்பை நடத்துமாறு நாம் சர்வதேச சமூகத்தினை கோருகின்றோம்.

நன்கு, ஆராய்ந்து, சிந்தித்தே நாம் இந்த வேண்டுகோளை முன்வைக்கின்றோம். சாத்வீக போராட்டம் மட்டுமல்ல, கடந்த 10 வருடங்களில் தமிழ் தேசிய கூட்டமைப்பு மேற்கொண்ட சரணாகதி அரசியல் கூட சிங்கள அரசாங்கங்களின் மனக் கதவுகளை திறக்கவில்லை. அவர்களின் எண்ணங்களிலும் செயற்பாடுகளிலும் இம்மியளவும் மாற்றம் ஏற்படவில்லை. இந்த நிலையில், வரலாற்று பட்டறிவில் இருந்தும், முரண்பாடுகளுக்கு தீர்வுகாணும் சர்வதேச சமூகத்தின் சமகால அணுகுமுறைகள் அடிப்படையிலும், சர்வதேச சமூகத்திடம் ஒரு கருத்துக்கணிப்பை எமது மக்கள் மத்தியில் நடத்தி எமது மக்கள் எத்தகைய ஒரு தீர்வினை விரும்புகிறார்கள் என்பதனை அறிந்து நிரந்தரமான ஒரு தீர்வினை ஏற்படுத்துமாறு நாம் அவர்களைக் கோருவதை தவிர வேறு வழியில்லை.

நாகரிகம் வளர்ச்சியடைந்து, சர்வதேச மனித உரிமை சட்டங்கள், பிராமணங்கள் என்பவை நிறுவனமயப்படுத்தப்பட்டு, தகவல் தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்துள்ள இந்த 21 ஆம் நூற்றாண்டில் உலகின் மூத்த குடிகளில் ஒன்றான தமிழ் இனம் இலங்கையில் திட்டமிட்ட இனஅழிப்புக்கு உட்படுத்தப்பட்டு இருந்த இடம் தெரியாமல் அழியும் நிலைமையை இந்தியா, சர்வதேச சமூகம் மற்றும் ஐ. நா ஆகியவை இனிமேலும் அலட்சியயமாக பார்த்துக்கொண்டிருக்கக்கூடாது. பல் நாடுகளில் இனங்களுக்கு இடையிலான முரண்பாடுகளைதீர்ப்பதற்கு ஜனநாயக ரீதியான, நடைமுறை சாத்தியமான, சர்வதேச சட்ட பிரமாணங்களுக்கு உட்பட்ட மிகச்சிறந்த ஒரு வழிமுறைதான் கருத்துக்கணிப்பு நடத்துவதாகும். யுத்தம் நடைபெற்றபோது எமது பிரச்சினையில் தலையீடுசெய்த நாடுகளும், மத்தியஸ்தம் செய்ய முன்வந்த நாடுகளும் இன்று யுத்தம் முடிவடைந்த பின்னர் எம்மை ஓர் ஆபத்தான நிலைமையில் விட்டுவிட்டு ஒதுங்கிநிற்பதன் மூலம் பெரும் தவறை இழைத்துள்ளன. 30 வருட கால யுத்த காலத்தில் நாம் இழந்த நிலங்களை விட கூடுதலான நிலங்களை கடந்த 10 வருடங்களில் நாம் இழந்துவிட்டோம். அரச இயந்திரங்கள் யாவும் எமக்கு எதிரான கட்டமைப்பு, கலாசார ரீதியான படுகொலைக்காக முடுக்கிவிடப்பட்டுள்ளன. ஆகவே, தமிழ் மக்கள் சர்வதேச சமூகத்தின் உடனடியான தலையீட்டை தற்போது கோருகிறார்கள். கருத்து கணிப்பு ஒன்றை நடத்துவதற்கான முன்னெடுப்புக்களை சர்வதேச சமூகம் மேற்கொள்ளவேண்டும். குறிப்பாக இந்தியாவுடன் இணைந்து சமாதான பேச்சுகளில் அனுசரணை வழங்கிய இணைத்தலைமை நாடுகள் காத்திரமான தலையீடு ஒன்றை செய்வதற்கான தார்மீக பொறுப்பை கொண்டிருக்கின்றன. கருத்துக்கணிப்பு அடிப்டையிலான தீர்வு ஒன்றைகொண்டுவருவதற்கு காலதாமதம் ஏற்படும் பட்சத்தில் சர்வதேச கண்காணிப்புடன் கூடிய இடைக்கால தீர்வு ஒன்றை அவசரமாக கொண்டுவந்து, மனித உரிமை மீறல்களை தடுப்பதுடன், போரினால் பாதிக்கப்பட்ட எமது மக்களைவலுவூட்டும் நடவடிக்கைகளை அவர்கள் எடுக்கவேண்டும் என்றும் இந்த தேர்தல் விஞ்ஞாபனம் கோருகின்றது.

இதயசுத்தியுடனான சமாதான முன்னெடுப்புக்களையும் பேச்சுகளையும் நாம் என்றும் ஆதரிப்போம். ஆனால், அவை இந்தியா அல்லது வேறு ஒரு நாட்டின் மத்தியஸ்துடன் நடைபெற வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. இது தமிழ் மக்களின் வரலாற்று ரீதியான ஒரு பட்டறிவின்பாற்பட்ட ஒரு படிப்பினை ஆகும்.

இனி, நான் தமிழ் மக்கள் தேசிய கூட்டமைப்பின் செயற்பாடுகள் பற்றி சிறிது குறிப்பிட விரும்புகிறேன்.

சில தினங்களுக்கு முன்னர் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் தெரிவித்துள்ள சில கருத்துக்கள் எமது மக்களை குழப்பி அரசியல் இலாபம் தேடும் வகையில் அமைந்துள்ளன. அவரது பொய்யான தகவல்களையும் கருத்துக்களையும் எமது மக்கள் நம்பி ஏமாந்த ஒரு காலம் இருந்தது. ஆனால், எமது மக்கள் இனியும் ஏமாறப் போவதில்லை. அவர்கள் விழித்துக் கொண்டுவிட்டார்கள்.

ஆட்சியாளர்கள் பெருமளவில் பணங்கொடுத்து, பற்பல உதிரிக் கட்சிகளை வாங்கி, வாக்குகளை பிரித்து தமிழ் தேசிய கூட்டமைப்பை தோற்கடிக்க சதி செய்வதாக சுமந்திரன் ஒரு கதையை கூறியிருக்கிறார். அரசாங்கம் கோடி கோடியாகப் பணம் கொடுத்து பல கட்சிகளை வடக்கு கிழக்கில் போட்டியிட வைத்திருக்கின்றது என்பது உண்மை. ஆனால், அதன் நோக்கம் தமிழ் தேசிய கூட்டமைப்பை தோற்கடிப்பதற்காக அல்ல. ஆட்சியாளர்களின் கருத்துக்களையும் செயற்பாடுகளையும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் கருத்துக்களையும் செயற்பாடுகளையும் கவனமாக ஆராய்ந்து பார்த்தலே இந்த நடவடிக்கைகளுக்கு காரணம் புரியும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெறுவதையே அரசாங்கம் விரும்புகிறது என்பதை இலகுவில் புரிந்து கொள்ளலாம். இது ஒன்றும் **Rocket Science** அல்ல. பொது ஜன பெரமுனவின் முக்கிய தலைவர்களான ஜி. எல்.பீரிஸ், கெஹேலிய ரம்புக்வல ஆகியோர் வடக்கில் தமிழ் தேசிய கூட்டமைப்பும் தெற்கில் தமது கட்சியான சிறிலங்கா பொதுஜென பெரமுனவுமே வெல்லும் என்று வெளிப்டையாகவே கூறியிருக்கின்றார்கள். இது தெற்கில் தமது கட்சியையும் வடக்கு கிழக்கில் தமிழ் தேசிய கூட்டமைப்பையும் வெல்ல வைக்கும் ஓர் உளவியல் உத்தி.

தமிழ் தேசிய கூட்டமைப்பு வெற்றி பெற வேண்டும் என்று ஆட்சியாளர்கள் விரும்புவதற்கு வலுவான காரணங்கள் இருக்கின்றன. மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் எதிர்காலத்தில் சர்வதேச சமூகத்திடம் இருந்து கடும் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படும் இன்றைய நிலையில், கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் போது போர்க் குற்றம் என்ற சர்வதேச பொறியிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அப்போதைய அரசாங்கத்துக்கு உதவியது போன்ற உதவிகளை எதிர்காலத்தில் தானும் அதனிடம் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும் என்றே நினைக்கின்றது.

இலங்கையின் பங்கு பற்றுதல் இன்றி சர்வதேச போர்க் குற்ற விசாரணை நடக்கவிருந்த நிலையில், இலங்கைக்கு எதிராக சர்வதேச சமூகம் பொருளாதார தடைகளை ஏற்படுத்தும் நிலையில், ராஜபக்ஷக்களுக்கு எதிராகப் பயண தடைகளை ஏற்படுத்தும் நிலையில், எவ்வாறு நல்லாட்சி அரசாங்கம் இலங்கையைப் பாதுகாத்துக் கொண்டது என்பது பற்றி முன்னாள் வெளிநாட்டமைச்சர் மங்கள சமரவீர **Daily Mirror** பத்திரிகைக்கு அண்மையில் வழங்கியுள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேசப் போர்க்குற்ற விசாரணையை இலங்கையின் கைகளுக்குத் தாங்களே துணிந்து கொண்டுவந்ததாக அவர் வெளிப்படையாகவே கூறியிருக்கிறார். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முழுமையான ஒத்துழைப்பு இன்றி இது நடைபெற்று இருக்கவே முடியாது. ஆகவே, சர்வதேச நெருக்கடிகளைத் தொடர்ந்து சமாளிக்க ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வெற்றி மிகவும் அவசியமான ஒன்றாக இருக்கிறது.

மேலும் இவர்களைப் பயன்படுத்தி சலுகை அரசியலூடாக சிங்கள, பௌத்த பேரினவாதத்தை இலகுவில் விஸ்தரிக்க முடியும் என்பதும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வெற்றிபெற வேண்டும் என்று ஆட்சியாளர்கள் விரும்புவதற்கு காரணமாகும். நாம் இவற்றிற்கு மசியமாட்டோம் என்பது இரண்டு பிரதான கட்சிகளுக்கும் நன்கு தெரியும். கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது இரண்டு தடவைகள் ஆதரவு கோரி என்னிடம் ராஜபக்ஷக்கள் தூது அனுப்பியவர்களுக்கு நான் கொடுத்த பதில்களில் இருந்து என்னை நன்றாக எடைபோட்டிருப்பார்கள்.

அதனால்தான், பலமான சில அமைச்சுக்களை கொடுத்தேனும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பை அரசுடன் இணைத்துக்கொள்ள வேண்டும் என்று பொதுஜன பெரமுன விரும்புகிறது. அதேபோலத்தான், தமிழ் தேசிய கூட்டமைப்பும் கோட்டாபய அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதற் கான ஏற்பாடுகளை இப்பொழுதிருந்தே செய்து வருகின்றது. இதன் ஒரு எதிரொலியாகத் தான் யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்ற பிரசார கூட்டம் ஒன்றில் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியத்தை சுமந்திரன் அவர்கள் எடுத்துக்கூறியிருந்தார்.

(05ஆம் பக்கம் பார்க்க)

# நாங்கள் இணங்கச் செய்யும் ...

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன், கடந்த ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வெளிப்படையாக ஆதரவு தெரிவித்து பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்ட ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் இன்று தமிழ் தேசிய கூட்டமைப்பை வெற்றி பெற வைப்பதற்காக ஆட்சியாளர்களினால் எந்தவித நிபந்தனைகளும் இன்றி தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு வேலை செய்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். அரசாங்கத்தின் தயவில் வெளிப்படையாகவே இயங்கும் ஜனநாயக போராளிகளின் கட்சி தமிழ் தேசியக் கூட்டமைப் புடன் வெளிப்படையாக கைகோர்த்திருப்பது தேர்தல் முடி வடைந்த பின்னர் தமிழ் தேசிய கூட்டமைப்பானது மஹிந்த – கோட்டா அரசில் இணைவதற்காக முன்கூட்டியே உடன் படிக்கை ஒன்று ஏற்கனவே எட்டப்பட்டிருப்பதையே கட்டி யம்கூறி நிற்கிறது. தமிழ் தேசிய கூட்டமைப்பு தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இனப்படுகொலைக்கான சர்வதேச சுயாதீன விசாரணை பற்றி எதையும் தெளிவாகக் குறிப் பிடாமையும் இதனை மேலும் உறுதிப்படுத்துகின்றன.

ஒரே நாட்டுக்குள்ளேதான் தீர்வு என்பதை நாம் வெளிப்படையாக விஞ்ஞாபனத்தில் சொல்லியும், சமஷ்டி என்றால் பிரிவினை என அந்தப் பக்கத்தில் ராஜபக்ஷக்கள் பிரச்சாரம் செய்கிறார்கள் என்று சுமந்திரனே தனது வாயால் ஒப்புக்கொண்டிருக்கிறார். இது ஒருபுறத்தில் பொதுஜன பெரமுன கூடுதல் வாக்குகளைப் பெறுவதற்கு உதவும் அதேவேளை, எதுவுமே இல்லாத தமிழ் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தை தமிழ் மக்கள் பிழையாகப் பார்ப்பதை தவிர்ப்பதற்கான அரசாங்கத்தின் உதவியாகவும் இது இருக்கக் கூடும்.

சிங்கள மக்களில் கணிசமானோர் இணங்காத எந்தத் தீர்வும் நிலையானதல்ல. இதைச் சொல்லாமல் அரசியல் செய்பவர்கள் மக்களை ஏமாற்றுகிறார்கள் என்றும் சுமந்திரன் கூறி இருக்கிறார். இதன்மூலம் சுமந்திரன் என்ன கூறுகிறார் என்றால், சிங்கள மக்கள் இணங்கும் ஒரு தீர்வினைத்தான் தமிழ் தேசிய கூட்டமைப்பு அரசாங்கத்திடம் கோரும் என்பதைத்தான். தமிழ் மக்களுக்கு இந்தத் தீர்வுதான் வேண்டும் என்று தமிழ் மக்களின் வரலாறு, பூர்வீகம், சட்டரீதியான சுய நிர்ணய உரிமை ஆகியவற்றை எடுத்துக்கூறி சிங்கள மக்களை அதற்கு இணங்க வைக்க வேண்டும் என்று சிந்திக்காமல், சிங்கள மக்கள் இணங்கும் ஓர் தீர்வினை எமது மக்கள் மத்தியில் திணிக்க முயலும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் கபட நாடகத்தை மக்கள் அறிந்துகொள்ளவேண்டும்.

சிங்கள மக்கள் இணங்கும் ஒரு தீர்வினை பெற்றுக் கொள்ளவேண்டும் என்பதற்காகத் தான் தமிழ் தேசிய கூட்டமைப்பு புதிய அரசியல் யாப்பு தயாரிக்கும் யோசனையில் பௌத்தத்துக்கு முன்னுரிமை அளிப்பதற்கும் ஒற்றை ஆட்சிக்குப்பட்ட தீர்வுக்கும் ஒத்துக்கொண்டதுடன் வடக்கு கிழக்கு இணைப்பை வலியுறுத்தவும் தவறியது.

ஆனால், எமது அணுகுமுறை என்னவென்றால் சிங்கள மக்கள் இணங்கும் ஒரு தீர்வை அல்ல, சிங்கள மக்களை நாம் இணங்கச்செய்யும் ஒரு தீர்வினை நாம் பெறுவதும் பெற்றுக் கொள்வதுதான். அதற்காகத்தான் நான் எதற்கும் அஞ்சாமல் எமது பூர்வீகம், வரலாறு, எமது சுயநிர்ணய உரிமை, நாம் ஏன் ஒரு தேசம், நாம் ஏன் சிங்களவர்களை விட இந்த நாட்டுக்கு கூடுதல் சொந்தக்காரர் என்பவற்றை எல்லாம் கூறிவருகின்றேன். அவ்வாறு கூறியதால்த்தான் இரண்டு நாள்களுக்கு முன்னர் பொலிஸார் வந்து என்னைக் கேள்வி கேட்டனர்.

சுமந்திரன் பின்வறுமாறும் கூறியிருக்கிறார்:

‘அந்தப் பக்கத்தில் ஈழம் பிடித்துத் தருவோம் என்ற உணர்ச்சி அரசியல் செய்பவர்களும் சமாதானமான வழிகளிலே ஒரே நாட்டுக்குள்ளேதான் அவர்கள் தீர்வை எதிர்பார்ப்பதை எம் மக்கள் மத்தியில் தெளிவாகச் சொல்லப் பயப்படுகின்றார்கள் என்றார். மேலும் அவர் எமது உரிமை, உரித்துப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமென்பதில் உறுதி கொண்டவர்கள் இந்த உண்மைகளை வெளிப்படையாகக் கதைக்க வேண்டும். கடந்த ஐந்தாண்டுகளில் நாம் சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வு தொடர்பில் சர்வகட்சி இணக்கப்பாட்டை எட்டி இருக்கின்றோம். அரசியலமைப்பு வரைபொன்று இருக்கிறது. அதை நாம் அரசியலமைப்பாக மாற்ற வேண்டும். அதற்கான ஆணையை தமிழ் மக்கள் எமக்குத் தர வேண்டும்’ – என்று கூறியுள்ளார்.

ஒரே நாட்டுக்குள் என்று சுமந்திரன் கூறுவது ஒற்றை ஆட்சிக்குள்தான் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. உத்தேச அரசியல் யாப்பு வரைவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒற்றை ஆட்சிக்கு உட்பட்ட ஒரு தீர்வுக்குத்தான் இணங்கியது என்பது எமது பல்கலைக்கழகங்களின் கலாநிதிகள், பேராசிரியர்களினால் சந்தேகத்துக்கு இடமின்றி தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. ஆனால், சுமந்திரனோ தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்றவகையில் விதண்டாவாதம் செய்து வருகின்றார். ‘ஏகீய’ என்ற சிங்கள சொல்லும் ‘எக்சத்’ என்ற சிங்களச் சொல்லும் ஒரே பொருளுடையன என்று கூறப்பார்க்கின்றார்.

இலங்கையில் ஒற்றை ஆட்சிக்கு உட்பட்ட எந்த தீர்வும் அர்த்தம் உள்ள ஒரு தீர்வாக அமையாது என்பதே வரலாறு எமக்குப் புகட்டும் பாடம். ஒற்றை ஆட்சிக்கு உட்பட்ட ஒரு தீர்வினை எமது மக்களின் மீது திருட்டுத்தனமாக தமிழ் தேசிய கூட்டமைப்பு திணிக்கக்கூடாது. அப்படியானால், இம்முறை தேர்தல் விஞ்ஞாபனத்தில் இதனைத் தெளிவாகக் குறிப்பிட்டு மக்களிடம் ஆணை கேட்டிருக்கவேண்டும். இல்லாதுவிட்டால், தமக்கு என்ன தீர்வு வேண்டும் என்பதை எமது மக்களிடமே அறிந்துகொள்ளும் கருத்துக் கணிப்பு ஒன்றுக்கு செல்ல முன்வர வேண்டும். இதற்கு சட்டத்தில் இடம் இருக்கிறது. இதனைத்தான் நாம் வலியுறுத்துகின்றோம். ஒன்றில் இணைந்த வடக்கு கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான ஒரு தீர்வினை கொண்டுவர வேண்டும் அல்லது எமது மக்கள் என்ன விரும்புகின்றார்கள் என்பதை அறிந்து அந்த அடிப்படையில் தீர்வுக்கு முயற்சிக்கவேண்டும். எமது மக்கள் ஒற்றை ஆட்சிதான் வேண்டும் என்றால் அதை நாம் ஏற்றுக்கொள்வோம். மக்கள் சமஷ்டி வேண்டும் என்றால் அதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும். இல்லை, வேறு ஒரு மேலான தீர்வுதான் வேண்டும் என்றால் அதனையும் அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அதேவேளை, பௌத்தத்துக்கு முன்னுரிமை கொடுத்து, வடக்கு – கிழக்கு இணைப்பை உறுதிப்படுத்தாத தாம் தயாரித்த அரசியலமைப்பு வரைவை அரசியலமைப்பாக மாற்றுவதற்கான ஆணையை சுமந்திரன் கோரியிருப்பதும் மக்களை ஏமாற்றும் நடவடிக்கையே. இதன்மூலம், இறுதி தீர்வு, பௌத்தத்துக்கு முன்னுரிமை அளிக்கப்பட்ட, ஒற்றையாட்சிக்கு உட்பட்ட, வடக்கு – கிழக்கு இணையாததாகவே இருக்கப்போகின்றது என்பது நிரூபணமாகின்றது. ஆனால், இம்முறை தேர்தல் விஞ்ஞாபனத்தில் சமஷ்டி தீர்வினை கவர்ச்சிகரமான வகையில் முன்மொழிந்து மக்களை ஏமாற்றி இருக்கின்றார்கள்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் உத்தேச அரசியலமைப்பு வரைபின் உண்மை முகத்தை தோலுரித்துக் காட்டியவர்களில் கலாநிதி குமாரவடிவேல் குருபரனும் ஒருவர். இதன் காரணமாகவும், இனப்படுகொலை தொடர்பிலான சர்வதேச விசாரணைக்கு எதிராக எப்படி தமிழ் தேசிய கூட்டமைப்பு அரசாங்கத்தை காப்பற்றும் வகையில் செயற்பட்டது என்பதை எடுத்துக் கூறியமையும் குருபரனுக்கு நல்லாட்சி அரசாங்கத்தில் அநீதி இழைக்கப்பட்ட போது தமிழ் தேசிய கூட்டமைப்பு கண்டும் காணாததும் போல இருந்துவிட்டமைக்கு காரணமாகும். எமது நீண்ட போராட்டத்தின் முதுகெலும்பாக இருந்ததே எமது யாழ் பல்கலைக்கழகம்தான். இன்று அதன் நிலையைப் பாருங்கள். அரசினாலும் அரசினால் உள் நுழைக்கப்பட்ட முகவர்களின் செயற்பாட்டாலும் மூளைசாலிகள் வெளியேறி வருகின்றனர். தமிழ் மக்களின் நீதிவேண்டி செயற்பட்ட சிவில் சமூக அமையத்தின் குரலாக ஒலித்த குருபரன் இன்று பல்கலைக்கழக விரிவுரையாளர் பதவியைத் துறக்கும் நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார். தாமாகவே திரட்சி பெற்று அநீதிகளுக்கு எதிராக வெகுண்டெழும் மாணவர் சமுகமும் மாணவர்களின் போராட்டங்களை தட்டிக் கொடுத்து வழிநடத்தும் பேராசிரியர் சமூகமும் இன்று செயலற்று நிற்கின்றன. ஒரு சமூகத்தின் மூளையின் பிறப்பிடமாகிய பல்கலைக்கழகத்துக்கே இந்த நிலை எனில் அச்சமூகத்தின் நிலை என்ன என்பதை உய்த்துணர்ந்து பார்க்க முடியும். இது எமது இனத்தின் இன்றைய நிலையின் ஒரு சிறு பக்கத்தினை மட்டும் எடுத்துக்காட்டுகின்றது.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் சலுகை அரசியலும் ஓரிருவரின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளுமே இன்றைய தமிழ் மக்களின் அவல நிலைக்கு காரணம். மிகப்பெரும் அதிகாரத்தை தனது கையில் வைத்திருந்த தம்பி பிரபாகரன் கூட ஒருபோதும் தனது அதிகாரத்தை தான்தோன்றித்தனமாக தனது விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்ப பயன்படுத்தியது கிடையாது. தீர்வு விடயத்தில் நிலத்திலும் புலத்திலும் உள்ள புத்திஜீவிகளை உள்ளடக்கிய ஒரு குழுவை அவர் உருவாக்கியிருந்தார். அதேபோல, பொருளாதார, சமூக, கலாசார மேம்பாடுகளுக்காக நிறுவனங்கள், கட்டமைப்புக்களை உருவாக்கி அவற்றை சுயாதீனமாக செயற்பட அனுமதித்திருந்தார். ஆனால், கடந்த 10 வருடங்களில் ஒட்டுமொத்தத் தமிழ் மக்களின் வாழ்க்கையையும் தீர்மானிக்கும் முடிவுகளை சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் மட்டுமே மேற்கொண்டுவந்திருந்தனர். அரசியல், பொருளாதார மற்றும் சமூக ரீதியான தீர்மானங்கள் மற்றும் செயற்பாடுகளில் மக்கள் முற்று முழுதாக புறக்கணிக்கப்பட்டனர். அரசியல் தீர்வு வரைவு தயாரிக்கும் விடயத்தில் வட மாகாண முதலமைச்சராக இருந்த என்னைக்கூட அவர்கள் கலந்தாலோசிக்கவில்லை. அந்தளவுக்கு சர்வாதிகாரத்தனமாக அவர்கள் செயற்பட்டுள்ளனர். எந்த ஒரு தீர்மானத்தை எடுக்கும் போதும் அவர்களுக்கு சில அளவுகோல்கள் (உசவைநசயை) இருந்தன. அவற்றில் முதலாவது நல்லாட்சி அரசாங்கத்துக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படக்கூடாது என்பதாகும். இரண்டாவது எதிர்க்கட்சி தலைவர் பதவிக்கு எந்த ஆபத்தும் வரக்கூடாது என்பதாகும். மூன்றாவது சிங்கள மக்கள் தமது முடிவுகளை சந்தேகத்துடனும் தவறாகவும் பார்க்கக்கூடாது என்பதாகும். நான்காவதாகவே தமிழ் மக்களின் நலன்கள் பற்றிக் கொஞ்சமேனும் செலுத்த வேண்டும் என்பது.

நான் இதை வெறும் பேச்சுக்காக கூறவில்லை. கூட்டமைப்பின் ஒவ்வொரு தீர்மானத்தையும் நீங்கள் ஆராய்ந்துபார்த்தால் உங்களுக்கு இந்த உண்மை புரியும். எமது சமூகத்தை கட்டமைப்புக்கள் ரீதியாக பலப்படுத்தி பொதுமக்களையும் புத்திஜீவிகளையும் உள்வாங்கி செயற்படும் எந்த முயற்சிகளையும் அவர்கள் செய்யவில்லை. புலம்பெயர் தமிழ் மக்கள் மற்றும் வெளிநாட்டு அரசாங்கத்திடம் இருந்து நிதியை பெற்று அபிவிருத்தி செயற்பாடுகளை நான் முன்னெடுப்பதற்காக முதலமைச்சர் நிதியத்தை ஏற்படுத்துவதற்கு நான் முனைந்த போது அவர்கள் அதற்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை. இதற்கு காரணம், நான் இனப்படுகொலை தீர்மானத்தினை நிறைவேற்றி அரசாங்கத்துக்கு எதிராக செயற்பட்டமையே ஆகும்.

எமது செயற்பாடுகளோ நிறுவன ரீதியான கட்டமைப்புக்களின் ஊடாக நன்கு ஆராயப்பட்டு முன்னெடுக்கப்படவிருக்கின்றன். நிறுவனமயப்படுத்தல் என்னும் பொழுது அரசியல் தீர்வு விடயம் சரி, சமூக, பொருளாதார மேம்பாட்டு விடயங்களும் சரி, எதுவானதாக இருந்தாலும் அவற்றுக்கான செயற்பாடுகளின் நிலைத்துநிற்கும் தன்மையும் உபாயங்களும் தனி ஒருவரில் தங்கி இருக்காமல் அந்த நோக்கங்கள் தொடர்பிலான கோட்பாடுகள் மற்றும் நடைமுறைகளின் மீதான கூட்டுப்பொறுப்பிலும் பற்றுறுதியிலும் தங்கி இருத்தலாகும்.

இதன் அடிப்படையில், உலகளாவிய ரீதியில் பரந்து வாழும் தமிழ் புத்திஜீவிகளை ஒருங்கிணைத்து நிலத்திலும் புலத்திலும் கட்டமைப்புக்களை உருவாக்கி செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளோம். நாம் மேலே குறிப்பிட்டுள்ள வாக்குறுதிகளை இந்த நிறுவனமயப்படுத்தப்பட்ட செயற்பாடுகளே பெற்றுத்தரும்.

அதேபோல, இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான ஒரு தீர்வினைக் காண்பதற்கு நாம் முன்வைக்கும் யோசனைகள் சர்வதேச சட்டங்களுக்கு அமைவானதாகவும் முரண்பாட்டு கோட்பாடுகளுக்கு அமைவானதாகவுமே இருக்கின்றன. இவை பல்வேறு சந்தர்ப்பங்களில் வெற்றிகரமாகப் பிரயோகிக்கப்பட்ட நடைமுறையில் இருக்கும் வழிமுறைகளே. தமிழ் மக்களின் அடையாளத்தையும் இருப்பையும் அழிப்பதையே குறியாகக்கொண்டு செயற்படும் இலங்கை அரசு ஒருபோதும் தமிழ் மக்களுக்கு தீர்வு எதனையும் வழங்கப்போவதில்லை என்பதையும் சர்வதேச உத்தரவாதம் இன்றிய எந்த உடன்படிக்கையையும் இலங்கை அரசு மதிக்கப்போவதில்லை என்பதையும் யுத்தத்துக்கு முந்திய வரலாறும், யுத்த கால வரலாறும், யுத்தத்துக்கு பிந்திய வரலாறும் பட்டவர்த்தனமாக வெளிப்படுத்துகின்றன. ஆகவே தான் ஒரு நிரந்தர தீர்வினை ஏற்படுத்துவதற்கு சர்வஜன வாக்கெடுப்பை நடத்துமாறு சர்வதேச சமூகத்தை நாம் கோருகின்றோம். அதேபோல, இறுதி யுத்தத்தில் என்ன நடந்தது, ஏன் தமிழ் மக்களுக்கு சுய நிர்ணய உரிமையின் அடிப்படையிலான தீர்வு அவசியம் என்பவற்றை சிங்கள மக்கள் விளங்கிக்கொண்டு நிரந்தர தீர்வு ஏற்படுவதற்கு அவர்களும் ஒத்துழைக்கவேண்டும் என்பதற்காகவே சர்வதேச விசாரணையை நாம் கோருகின்றோம்.

ஆகவே, வடக்கு கிழக்கில் வாழுகின்ற எமது அன்புக்கினிய மக்களே! தமிழ் மக்களின் எதிர்காலம் எப்படி அமையப்போகின்றது என்ற விதியை தீர்மானிக்கும் முக்கிய தேர்தலாக ஆவணி 5, 2020 திகதி அன்றைய நாடாளுமன்ற தேர்தல் அமைகிறது. உங்கள் வாக்குகள்தான் அந்த விதியை எழுதப்போகின்றன. நீங்கள் எழுதும் விதி வடக்கு – கிழக்கில் ‘மீனாட்சி’ மலர்வதற்கானதாக இருக்கட்டும்.

இறுதியாக ஒரு வேண்டுகோள், இம்முறை தேர்தலில் பல்வேறு முறைகேடுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தான் கள்ள வாக்குகள் போடுவதை பகிரங்கமாகவே ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆகவே, மக்களே விழிப்பாக இருந்துகொள்ளுங்கள். உங்களை சுற்றி என்ன நடைபெறுகின்றது என்பதை அவதானியுங்கள். குறிப்பாக இளைஞர், யுவதிகள் வாக்களிப்பு நிலையங்கள் மற்றும் வாக்குகள் எண்ணப்படும் இடங்களில் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுங்கள். உங்கள் கைகளில் இருக்கும் கமெரா தொலைபேசிகளை பயன்படுத்தி மோசடி நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களின் செயற்பாடுகளை ஆதாரப்படுத்துங்கள். அம்பலப்படுத்துங்கள். வாக்குகள் என்னும் செயற்பாடுகளை கண்காணிக்க எமக்கு உங்களின் உதவிகள் தேவைப்படுகின்றன.

வணக்கம்

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# மீனவர்களுக்கு எச்சரிக்கை!

இன்றிரவு8.30மணிவரையான காலப்பகுதியில் மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை மற்றும் பொத்துவில் ஊடாக மட்டக்களப்பு வரை ஆழ்கடல் பிரதேசங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இலங்கையின் தென்கிழக்குப் பகுதியிலான ஆழமான கடற்பரப்பில் அருட்டப்பட்டுள்ள முகில் கூட்டங்கள் காரணமாக இம்மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

அத்தோடு ஏனைய இடங்களிலும் அடை மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதோடு, இடியுடன் கூடிய மழையுடன் காற்றின் வேகமானது திடீரென மணிக்கு 70 – 80 கிலோமீற்றர் வரை அதிகரிக்க வாய்ப்புக் காணப்படுகின்றது எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வேளையில் கடல் கொந்தளிப்பாக காணப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மீன்பிடியில் ஈடுபடும் போது அவதானத்துடன் செயற்படுமாறு மீன்பிடிச் சமூகங்களை வளிமண்டலவியல் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

# சம்பந்தனின் மிரட்டல்கள் ராஜபக்ஷ அரசுக்குத் தூசி

## விமல் வீரவன்ஸ விளாசல்



தமிழர்கள் மாதிரி சிங்களவர்களையும் முட்டாளாக்கலாம் என்று சம்பந்தன் நினைக்கின்றார். அவரின் வாய்ச்சவடால் சிங்களவர்கள் மத்தியில் எடுபடவே மாட்டாது. அவரின் மிரட்டல்களுக்கு நாங்கள் அஞ்சவேமாட்டோம். அவரின் எச்சரிக்கைகள் அரசுக்குத் தூசி போன்றது.

– இவ்வாறு அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

'சமஷ்டியைக் கேட்கும் உரித்து எமக்கு உண்டு. தமிழ் மக்கள் அநாதைகளாக்கப்படவில்லை. அவர்களின் பின்னால் சர்வதேசம் நிற்கின்றது' என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் விடுத்துள்ள அறிவிப்பு தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

தமிழர்களை முட்டாளாக்கும் சம்பந்தன், சிங்களவர்களையும் முட்டாளாக்கலாம் என்று நினைக் கின்றார். சம்பந்தனின் வாய்ச்சவ டால் தமிழர்கள் மத்தியில்தான் எடுபடும். அது சிங்களவர்கள் மத்தியில் எடுபடவே மாட்டாது.

அரசியல் தீர்வு கிடைக்க ஆணை தாருங்கள் என்று கூறி தமிழ் மக்களை அன்று தொடக்கம் ஏமாற்றி வாக்குகள் சேகரித்து வரும் சம்பந்தன் தரப்பினர், இன்று சர்வதேசம் தமது பக்கம் என்று கூறி சிங்களவர்களை மிரட்டப் பார்க்கின்றார்.

இந்த மிரட்டல்களுக்கு நாங்கள் அஞ்சவேமாட்டோம். சம்பந்தனின் எச்சரிக்கைகள் அரசுக்குத் தூசி.

தமிழ் மக்களுக்குத் தீர்வை வழங்கச் சொல்லி எந்த நாடும் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கவே முடியாது.

புதிய ஆட்சியில் அரசு வழங்கும் பொதுவான தீர்வு நாட்டிலுள்ள சகலருக்கும் உரியதாகவே இருக்கும் – என்றார்.

# வடக்கு, கிழக்கில் நீதியான தேர்தல் சந்தேகமே; கூட்டமைப்பினரின் கருத்தில் நியாயம் உண்டு!

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு



வடக்கு, கிழக்கில் சிவில் நிர்வாகம் செய்ய வேண்டிய அனைத்து வேலைகளையும் இராணுவமே செய்கின்றது. இந்தநிலையில், அங்கு நீதியான தேர்தல் நடைபெறுவது சந்தேகமே என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூறுவதில் நியாயம் இருக்கின்றது.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் அக்கட்சியின் பிரதமர் வேட்பாளருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

சிங்கள ஊடகம் ஒன்றுக்கு அளித்த செவ்வியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாடெங்கும் சிவில் நிர்வாக நடவடிக்கைளில் இராணுவத்தின் பங்களிப்பும் தலையீடும் இருக்கின்றன. ஆனால், வடக்கு, கிழக்கின் நிலைமை படுமோசமாகவுள்ளது. அங்கு சிவில் நிர்வாகம் செய்ய வேண்டிய அனைத்து வேலைகளையும் இராணுவமே செய்கின்றது.

அதுமட்டுமன்றி அங்கு பாதுகாப்பு என்ற போர்வையில் வீதிகள் எங்கும் இராணுவத்தினர் நிலைநிறுத்தப்பட்டுள்ளனர். இராணுவத்தினரின் பிரசன்னம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

இந்தநிலையில் வடக்கு, கிழக்கில் நீதியான தேர்தல் நடைபெறுவது சந்தேகமே என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூறுவதில் நியாயம் இருக்கின்றது.

நாட்டின் ஜனாதிபதியே பாதுகாப்பு அமைச்சராக இருக்கின்றார். அவரின் உத்தரவுக்கமையவே முப்படையினர் செயற்படுகின்றனர்.

தற்போது நாடு இராணுவ ஆட்சியில் சிக்கித் தவிக்கின்றது என்பது கண்கூடு. எனவே, பொதுத் தேர்தலில் நாட்டு மக்கள் தீர்க்கமான ஒரு முடிவை எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் – என்றார்.

# தேர்தல் விஞ்ஞாபனத்தையே புறக்கணிக்கும் ராஜபக்ஷ அரசைத் தமிழர்கள் எப்படி நம்புவது?

## சந்திரிகா கேள்விக்கணை



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தையே புறக்கணிக்கும் ராஜபக்ஷ அரச தரப்பினர், தேர்தலின் பின்னர் தமிழ் மக்களின் பிரச்சினைகளை எப்படித் தீர்ப்பார்கள்?

– இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்ததையடுத்து தென்னிலங்கையில் ராஜபக்ஷ அரசும், தேரர்களும் அதற்கு எதிராகக் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். இந்தநிலையிலேயே சந்திரிகா மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

சிங்களவர்களைப் போல் தமிழர்களும் சகல உரிமைகளுடனும் இந்த நாட்டில் வாழ வேண்டும். போரால் பாதிக்கப்பட்ட அவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். படையினர் வசமுள்ள காணிகள் விடுவிக்கப்பட வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மை தெரியவரவேண்டும். ஒருமித்த நாட்டுக்குள் நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்க வேண்டும். இதனையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரி நிற்கின்றது.

தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகக் கூட்டமைப்பினர் உள்ளனர். அதனால் அம்மக்களின் எதிர்பார்ப்புகளை அம்மக்களின் ஆணையுடன் நிறைவேற்றும் வகையில் பொதுத்தேர்தலுக்கான விஞ்ஞாபனத்தைக் கூட்டமைப்பினர் முன்வைத்துள்ளனர்.

தேர்தல் விஞ்ஞாபனத்தையே புறக்கணிக்கும் ராஜபக்ஷ அரச தரப்பினர், தேர்தலின் பின்னர் தமிழ் மக்களின் பிரச்சினைகளை எப்படித் தீர்ப்பார்கள்? ஒருமித்த நாடு, சமஷ்டி அடிப்படையிலான தீர்வு, அதிகாரப் பரவலாக்கல் போன்ற கோரிக்கைகள் நாட்டுக்கு ஆபத்தானவை அல்ல. அதைக் கோருவதற்கு நாட்டின் பிரஜைகள் என்ற ரீதியில் தமிழர்களுக்கு உரிமை உண்டு.

கடந்த ஆட்சியில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் சிலவற்றுக்குத் தீர்வுகள் காணப்பட்டன. ஆனால், இந்த ஆட்சியில் சகல இன மக்களினதும் பாதுகாப்புக்கூட கேள்விக்குறியாகவுள்ளது. இந்தநிலையில், இந்த அரசே மீண்டும் ஆட்சியமைத்தால் நாட்டின் நிலைமை மேலும் மோசமாகும். எனவே, நாட்டு மக்கள்தான் சிந்தித்து முடிவெடுக்க வேண்டும் – என்றார்.

# தனியார் வர்த்தக ஊழியர்களின் சங்கம் இன்று அங்குரார்ப்பணம்

(பிரபாகரன் டிலக்சன்)

வடமாகாண தனியார் வர்த்தக ஊழியர் சங்கத்தினுடைய அங்குரார்ப்பண நிகழ்வும் நிர்வாகத் தெரிவும் இன்றைய தினம் ரிம்மர் மண்டபத்தில் இடம் பெற்றது. வடமாகாண தனியார் வர்த்தக நிறுவனங்களில்பணிபுரிகின்றஊழியர்கள்ஒன்றிணைத்து வடமாகாண தனியார் வர்த்தக ஊழியர் சங்கம் ஆரம் பிக்கப்பட்டுள்ளது.

இவ் ஊழியர் சங்கத்தின் தலைவராக சாமிநாதன் சிவகுமார், உப தலைவராக பாலச்சந்திரம் லக்ஸ்மன், செயலாளராக ரவீந்திரன் அஜந்தன், பொருளாளராக புவனேந்திரன் வினோராஜ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.





# சந்திரகுமார் குழுவினர் இன்று யாழில் பிரசாரம்






(பிரபாகரன் டிலக்சன்)

யாழ் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் சுயேச்சைக் குழு ஐந்தினுடைய தேர்தல் பரப்புரைக் கூட்டம் இன்று தியாகி அறக் கொடை மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் சமத்துவக் கட்சியின் தலைவரும் சுயேச்சைக் குழு ஐந்தினுடைய முதன்மை வேட்பாளருமான முருகேசு சந்திரகுமார் உட்பட ஏனைய வேட்பாளர்களும், கட்சி ஆதரவா ளர்களும் கலந்து கொண்டனர்.



# எனது தந்தை ஜே.வி.பியினரால் கழுத்தறுத்துக் கொல்லப்பட்டார்

## நான் புலிகளுக்கு உதவினேன்; சுமனரத்ன தேரர் கூறுகின்றார்

ஓர் இனத்தின் வாக்குக்களை மட்டும் நம்பி நான் தேர்தலில் இறங்கவில்லை. அனைத்து இனங்களிலும் எனக்கு ஆதரவாளர்கள் இருக்கின்றார்கள்.

– இவ்வாறு நாடாளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுயேச்சைக் குழுவில் போட்டியிடும் மட்டக்களப்பு மங்களராமய விகாரையின் பிரதம குரு வண. அம்பிட்டிய சுமனரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் தனது வெற்றி நிச்சயம் என்றும் அவர் கூறியுள்ளார்.

பேட்டியின் முழு விபரம் வருமாறு:-

**கேள்வி:-** நீங்கள் முதலில் உங்களைப் பற்றிச் சொல்லுங்கள்.

**பதில்:-** நான் மட்டக்களப்புக்கு 1993இல் வந்தேன். ஏறத்தாழ 27 வருடங்கள் கடந்துவிட்டது, நான் வருவதற்கு முன் இங்கு பௌத்த பிக்குகள் எவரும் இருக்கவில்லை. இங்கு வருவதற்கு முன்பு கண்டி – தெல்தெனிய விகாரையில் இருந்தேன். நான் வந்த பிற்பாடே இந்த விகாரையை இவ்வளவு வசதியோடும் அழகாகவும் உருவாக்க முடிந்தது. இவ் விகாரையை இவ்வளவு சிறப்பாகச் செய்வதற்கு எனக்கு உதவியவர்களில் அநேகர் தமிழர்களாவர்.

அதைவிடக் கூடுதலாக உதவியவர், அந்நாளில் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் மாவட்ட நிதிப் பொறுப்பாளராக இருந்த கௌசல்யனாவார்.

**கேள்வி:-** அப்படியானால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் நீங்கள் நெருக்கமாகச் செயற்பட்டீர்களா?

**பதில்:-** நான் அவர்களோடு மிகவும் இணக்கமாக இருந்தேன். சிங்கள மக்களுக்கு அவர்களால் எதுவித அசம்பாவிதங்களும் ஏற்படாமல் பாதுகாத்து வந்தேன். அப்படி ஏதாவது வந்துவிட்டால் கூட பேசி தீர்த்துவைப்பேன். அதுமட்டுமின்றி விடுதலைப்புலிகள் இயக்கத்தின் சில போராளிகள் காயமடைந்தால் இரகசியமாக பன்சாலையில் வைத்து வைத்தியம் பார்ப்பேன்.

உதாரணத்திற்கு ஒன்றைக் கூறுகிறேன். ஒரு தடவை 'புகலவன்' என்னும் புலி உறுப்பினர் போராட்டத்தின் போது, கால் முறிந்து பன்சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். அவருக்கு ஒறுவிலயில் இருக்கும் வைத்தியரை அழைத்துவந்து வைத்தியம் செய்து சுகப்படுத்தி அனுப்பி வைத்தேன்.

**கேள்வி:-** பாதுகாப்புப் படையினர் கண்டுகொள்ள வில்லையா?

**பதில்:-** பாதுகாப்புப் படையினருக்கு நான் புலிகளின் தளமான கொக்கட்டிச்சோலைக்குச் சென்று வருவது நன்றாகத் தெரியும். சிங்கள மக்களின் உடமைகளை மீட் பதற்காக நான் அடிக்கடி அவர்களிடம் செல்வது அவர்களுக்குத் தெரியும். என்னைப் போன்ற ஒருவர் பாதுகாப்புப் படையினருக்கு அக்காலத்தில் தேவையாக இருந்தது. ஆனாலும், சில உயர் அதிகாரிகள் என் மீது வெறித்தனமான கோபம் வைத்திருந்தார்கள். பல விடயங்களை என்னிடமிருந்து அறிய முற்பட்டார்கள். எனக்குத் தெரிந்தவைகளை மாத்திரம் சொல்வேன். புலிகள் என்னிடம் எல்லாவற்றையும் சொல்ல மாட்டார்கள்.

**கேள்வி:-** நாடாளுமன்றத் தேர்தலில் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடுகின்றீர்கள் இந்தக் குழுவில் ஒரு தமிழரைத் தவிர வேறு எவரும் இடம்பெறவில்லை. ஆனால், உங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் மக்கள் உங்களோடு நெருக்கமான உறவை வைத்திருக்கின்றார்கள் எனவும், அவர்கள் உங்களைக் காப்பாற்றி வருகின்றார்கள் எனவும் குறிப்பிட்டிருந்தீர்கள். அவர்களில் ஒரு சிலரையாவது வேட்பாளர்களாக நிறுத்தியிருக்கலாம். அது இடம்பெறவில்லை. இது ஒரு குறையாகத் தமிழ் மக்களால் பார்க்கப்படுகின்றது. அது பற்றி என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?

**பதில்:-** ஒரேயொரு தமிழரைச் சேர்த்திருக்கின்றோம். எங்களுக்குக் கால அவகாசம் இல்லா



ததால் ஒரு தவறு நடந்துவிட்டது. இவ்விடயத்தில் குறை காண்பது தவறானது.

**கேள்வி:-** கடந்த வருடம் பட்டிப்பளை பிரதேச செயலகத்துக்குள் சென்று பிரதேச செயலாளரோடு முரண்பட்டு, குழப்பம் விளைவித்தீர்கள். அக்காலப்பகுதியில் அது பற்றி உங்களுக்கு எதிராகப் பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டனவே?

**பதில்:-** பிரதேச செயலாளர் கௌரியின் காரியாலயத்துக்கு மூன்று தடவைகள் ஒரே விடயத்துக்காகச் சென்று வந்திருக்கிறேன். அந்த விடயம் சம்பந்தமாக ஜனாதிபதி அனுப்பிய கடிதத்துக்குக் கூட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதனால் ஆத்திரமுற்றது உண்மை; அது தவறுதான். ஒரு பௌத்த பிக்கு அவ்வாறு நடந்திருக்கக் கூடாது.

அதை இன்றுதான் வெளிக்கொணர்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. நான் மூன்று வயதுக் குழந்தையாக இருந்தபோது எனது தகப்பனார் ஜே.வி.பியினரால் கழுத்தறுக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டார். இதன் பின்னர் நான் அநாதையாகி விகாரையில் வளர்க்கப்பட்டேன். அன்றிலிருந்து தவறுகளையும், தப்புக்களையும் சந்திக்கின்றபோது என்னையறியாமல் ஓர் ஆவேசம் ஏற்படுகின்றது. அதனை அடக்கி நிதானமடைய வேண்டும் என்ற எண்ணம் என்னிடம் இல்லாமலில்லை. ஆனால், அதைச் செயற்படுத்த முடியவில்லை. மற்றைய வேளைகளில் என்னிடம் அன்பு, மரியாதை, பொறுமை, சகிப்புத் தன்மை என்பன நிறைந்து காணப்படுகின்றன.

**கேள்வி:-** மட்டக்களப்பு மாவட்ட சிங்கள மக்களின் வாக்குகள், இந்த நாட்டின் முன்னிலை வகிக்கின்ற சிங்கள கட்சிகளுக்கு போய்ச் சேரக் கூடாதென்ற நோக்கில், ஒரு சுயேச்சைக்குழுவை உங்கள் தலைமையில் அமைத்துப் போட்டியிடுகின்றீர்கள் என மக்கள் மத்தியில் ஒரு கருத்து நிலவுகின்றது. இது பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?

**பதில்:-** இப்படி மக்கள் நினைக்கலாம். மக்கள் நினைப்பதை நாங்கள் தடுக்க முடியாது. இவ்வளவு காலமும் எமது மக்களான தமிழர்களும், சிங்களவர்களும் சேர்ந்து யார் யாருக்கோ வாக்குப் போட்டார்கள். பிரச்சினை தீர்ந்ததா? நாங்கள் தெரிவுசெய்த பிரதிநிதிகள் மிகவும் வசதியாக இருக்கின்றார்கள், வீடு கட்டியிருக்கிறார்கள், வாகனம் வாங்கியிருக்கிறார்கள், தங்களது பிள்ளைகளை படிப்பித்திருக்கின்றார்கள். நான் நாடாளுமன்ற உறுப்பினராக வந்தால் வீடு தேவையில்லை, கார் தேவையில்லை, எனக்குப் பிள்ளைகளே இல்லை. நான் மக்களுக்கு மனதார சேவை செய்வேன். முன்னணிக் கட்சிகளுக்கு வாக்குகள் சேரக் கூடாது என்ற எண்ணம் இல்லை.

# பாரிஸில் யாழ்ப்பாண இளைஞர் கொடூரமான முறையில் கொலை

பாரிஸ் – லாக்கூர்நெவ் பகுதியில் வசித்துவந்த யாழ்.இளைஞன் ஒருவர் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளார் என அந்நாட்டு ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த சம்பவத்தில் யாழ்ப்பாணம் – தொண்டமானாறைச் சேர்ந்த ஜெயசுதன் தியாகராஜா (43 வயது) என்பவரே கொடூரமான முறையில் கொல்லப்பட்டுள்ளார் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

வீட்டு வாடகை தொடர்பில் வீட்டு உரிமையாளருடன் இவருக்கு பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து வீட்டு உரிமையாளரின் நண்பர்கள் சிலரால் இவர் தாக்கப்பட்டு, கடந்த புதன் கிழமை வெளியேற்றப்பட்டுள்ளார்.

இவ்வாறு காயங்களுடன் வீதியில் நின்ற அவரை, பொலிஸார் பொறுப்பேற்று, வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

எனினும் இவரது சடலம் வியாழக்கிழமை அவரது வீட்டில் இரத்த வெள்ளத்தில் காணப்பட்டதாக வீட்டு உரிமையாளரால் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இவரது தலை,முகம், கழுத்துப் பகுதிகளில் பலத்த காயங்கள் காணப்பட்டுள்ளன.

அத்துடன் இவரது வீடு உரிமையாளரால் பூட்டப்பட்டிருந்த நிலையில் எவ்வாறு இவர்மீண்டும் வீட்டுக்குச் சென்றார் என்பது தெரியவில்லை எனக் கூறப்படுகின்றது.

மேலும் இவரது நெருங்கிய உறவினர்கள் எவரும் பிரான்ஸில் இல்லை எனவும், இவரது மனைவி இலங்கையில் வசிக்கிறார் எனவும் கூறப்படுகின்றது.

சம்பவத்தில் உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அந்நாட்டு பொலிஸார் குறித்த சம்பவம் தொடர்பாக தீவிர விசாரணையை முன்னெடுத்துள்ளனர் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# ஐ.டி.எச். மருத்துவமனையில் இப்போது பாதுகாப்பு மிகவும் பலப்படுத்தப்பட்டுள்ளது

## கொரோனா நோயாளிகள் இனித் தப்பிக்க முடியாது

ஐ.டி.எச். மருத்துவமனையில் இருந்து கொவிட்-19 தொற்றுறுதியான மேலும் ஒருவர் தப்பி சென்றுள்ளார் என சமூகவலைத்தளங்களில் வெளியாகும் தகவல் உண்மைக்கு புறம்பானதென அதன் பிரதான வைத்தியர் ஹசித அத்தனாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போது மருத்துவமனையில் சகல பாதுகாப்பு நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் வினவிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் நேற்றைய தினம் 6 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றுறுதியாகியுள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களம் இதனை தெரிவித்துள்ளது.

அவர்களில் நான்கு பேர் இந்தியாவின் சென்னையில் இருந்தும், மேலும் இருவர் பெலரூஸ் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்தும் நாடு திரும்பியவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாட்டில் இதுவரை கொரோனா தொற்றுறுதியானவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 770 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றில் பீடிக்கப்பட்டிருந்த மேலும் 9 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்பு பிரிவு இதனை தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனா தொற்றில் பீடிக்கப்பட்டிருந்த நிலையில் இதுவரை குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 103 ஆக அதிகரித்துள்ளது.

இந்தநிலையில் நாடளாவிய ரீதியில் உள்ள மருத்துவமனைகளில் 656 தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இதேவேளை கொவிட்-19 தொற்றுறுதியான 25 ஆயிரத்து 826 பேர் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளை நிறைவு செய்துள்ளனர்.

அத்துடன் முப்படையினர் ஊடாக முன்னெடுக்கப்படும் 44 தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் 4 ஆயிரத்து 606 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

# 'பேஸ்புக்' மோட்டார் பந்தயம்; கெஸ்பேவவில் 39 பேர் கைது!

## மோட்டார் சைக்கிள்கள் பறிமுதல்

பிலியந்தலை, கெஸ்பேவ பகுதியில் முகநூல் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத மோட்டார் சைக்கிள் பந்தயத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 39 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 27 மோட்டார் சைக்கிள்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நபர்கள் 20 முதல் 22 வயதுக்குட்பட்டவர்களாவர்.

விசாரணையின் பின்னர் அவர்களை கெஸ்பேவ நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# சிறுவர்களை துஷ்பிரயோகப்படுத்தி காணொலி எடுத்து வந்த ஆசிரியர்

நீண்ட நாள்களாக சிறுவர் களைத் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தி அதனை காணொலி எடுத்துவந்த ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொள்ளுப்பிட்டி பொலிஸா மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு மையத்தின் அதிகாரிகள் ஊடாக அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் தனியார் வகுப்புக்களை நடாத்தும் ஆசிரியர் எனவும் தெரியவந்துள்ளது.

சுமார் 10 வருடங்களாக அவர் இவ்வாறான துஷ்பிரயோகச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இதேவேளை குறித்த நபரினால் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்ட 3 சிறுவர்கள் நேற்று மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் சிறுவர்களைத் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தி அவர் எடுத்த காணொலிகள் சிலவற்றையும் அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு





# ஒரு யுகப் புரட்சியாக மாற்று அரசு அமையும் என்கிறார் ரவூப் ஹக்கீம்

மாற்று அரசாங்கத்தை மக்களின் பேராதரவுடன் அமைக்கப் போவதாக, நாடெங்கிலும் தாங்கள் பறைசாற்றி வருகின்றனர் எனவும், அது ஒரு யுகப் புரட்சியாகும் எனவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கம்பளையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவை அந்தப் பதவிக்கு போட்டியிடுவதற்கு அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன தீர்மானித்த சந்தர்ப்பத்தில் வடக்கிலும், தெற்கிலும் எரிமலைகள் குமுறிக்கொண்டிருந்தன. ஜனாதிபதி வேட்பாளராக யாரை தெரிவு செய்வது என்பது தொடர்பில் கட்சிக்குள் பல்வேறு உள்வீட்டுப் பிரச்சினைகள் தலைதூக்கியிருந்தன.

இறுதியில் சரியான தீர்மானத்திற்கு வந்து அன்னார் அந்த வேட்பாளர் அந்தஸ்தை வழங்கிய பின்னர் நாட்டில் அப்போது நிலவிய சூழ்நிலையில், பதினொரு ஆண்டுகளாக ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியில் பிரச்சினைகள் ஏற்பட்டு மீண்டும் அக்கட்சியினால் வெற்றி பெற முடியுமா என்ற கேள்வி எழுந்தது.

எங்களது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபக தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் அப்போழுது கிழக்கில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டிருந்த பாரதூரமான சேதங்களுக்கு மத்தியில், எங்களது உரிமைகள் மறுக்கப்பட்டு, இந்திய – இலங்கை உடன்படிக்கையினால் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் அந்த தற்காலிக இணைப்பினால் எதிர்நோக்கிய பாரதூரமான நெருக்கடிகளின் விளைவாக நாங்கள் தனியொரு தரப்பாக அரசியலுக்குள் பிரவேசிக்க நேர்ந்தது.

அந்த தருணத்தில் ஆர்.பிரேமதாஸ ஜனாதிபதி தேர்தலில் அவருக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு எங்களிடம் வேண்டிக்கொண்டார். ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியுடன் செய்திருந்த ஒப்பந்தத்தை இரத்து செய்து,



அவசியமான சட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் அவருக்கு ஆதரவளித்த பின்னணியில் சிறிய வாக்கு வித்தியாசத்தில் அத்தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியாகும் வாய்ப்பு ஆர்.பிரேமதாஸவுக்குக் கிட்டியது.

அவர் அந்த உதவியை ஒருபோதும் மறந்துவிடவில்லை. அவருக்கு எவ்வளவோ பிரச்சினைகள் ஏற்பட்டன. குறிப்பாக, அவருக்கு எதிராகக் குற்றப் பிரேரணை முன்வைக்கப்பட்டபோதும் எமது தலைவர் அஷ்ரப் பிரேமதாஸவுடன் இருந்ததனால் எங்களது சமூகத்தினர் மத்தியிலே அனேகமானோர் எங்களை விமர்சிக்கத் தலைப்பட்டனர். ஆனால், நாங்கள் அதனை பொருட்படுத்தாது, சரியாக செயற்பட்டு அவரை வெற்றிபெறச் செய்தமை மட்டுமல்லாமல், அந்தக் குற்றப் பிரேரணையும் முறியடிக்கச் செய்தோம்.

ஐக்கிய தேசிய கட்சிக்குள் ஏற்பட்ட அணிப்பிறழ்வு மற்றும் உட்பூசல் நெருக்குவாரங்களுக்கு மத்தியிலும் சிறுதொகையினர் கட்சியிலிருந்து வெளியேறிச் சென்றனர். அதனால் அக் கட்சிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. ஓர் உடன்பாட்டுக்கு வந்து அதிகாரத்தை கைப்பற்றுவதற்கு இருந்த சாத்தியப்பாடுகள் இறுதியில் கைகூடாமல் போய்விட்டன. ஆயினும், கட்சி மீண்டும் தலைதூக்கியது.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரிடம் காணப்பட்ட குறைபாடுகள், பலவீனங்கள் பற்றி அவருடன் பழகியவர்களுக்கு நன்றாக தெரியும். அவற்றை திருத்திக்கொள்ளுமாறு பலமுறை அவரிடம் கூறிப் பார்த்தோம். அவற்றிற்கு அவர் செவிமடுக்கவில்லை. ஜனாதிபதி தேர்தலிலும் இழுத்தடிப்பு செய்துவிட்டு கடைசி நேரத்திலேயே இணங்கியமையால் அத்தேர்தலில் வெற்றி வாய்ப்பு இழக்கப்பட்டது.

சஜித் பிரேமதாஸவுக்கு கிடைக்கவிருந்த வெற்றியை இல்லாமல் செய்ததோடு இப்பொழுது மக்கள் மத்தியில் மீண்டும் மேலோங்கியுள்ள அவருக்கு சாதகமாக எழுந்துவரும் ஆதரவு அலையை தடுப்பதற்கும் எத்தனிக்கப்படுகின்றது.

இந்தப் பின்னணியில் தான் மக்களின் ஆதரவு தளத்தை தக்கவைத்துக் கொள்வதற்காக வெவ்வேறு கட்சிகளை சேர்ந்த நாங்கள் இப்பொழுது கூட்டணி அமைத்து அதனூடாக சஜித் பிரேமதாஸவின் தலைமையில் அரசாங்கத்தை அமைக்கும் நோக்கத்துடன் இந்தப் பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்றோம்.

நாடெங்கும் பிரசாரம் செய்து மக்களின் மகத்தான பங்களிப்புடன் மாற்று அரசாங்கத்தினராக நாங்கள்தான் அமையப் போகின்றோம் என்பதை பறைசாற்றி வருகின்றோம். அது ஒரு யுகப் புரட்சியாகவும் அமையும்.

அத்துடன் இன்றைய ஆட்சியாளர்களின் போலியான தேசப் பற்றைப் பற்றியும் பேசியாக வேண்டும். குருநாகலில் புவனேகபாகுவின் மண்டபம் இடித்து தள்ளப்பட்டதை தொடர்ந்து எங்களுடைய நாட்டின் ஆட்சித் தலைமைகளில் முக்கியமான ஒருவரான மஹிந்த ராஜபக்ஷ உரையாற்றிய போது தெரிவித்துள்ள கருத்து மிகவும் கீழ்த்தரமானது. அவரது உரையை கேட்டு நான் மிகவும் மனம் வருந்தினேன்.

அது பொறுப்பு வாய்ந்த தலைவரொருவர் பேசக் கூடியதல்ல. புவனேகபாகு மன்னன் முஸ்லிம் பெண்ணொருவரையும் மனைவியாக வைத்திருந்தார் எனக் கேலியாகவும், கிண்டலாகவும் அவர் அக்கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தவர்களின் ரசனைக்கு ஏற்றவாறு பேசியது நகைப்புக்கிடமானது.

மன்னர் ஆதரவு முஸ்லிம்களான எங்களுக்கு செனரத் அரசனின் காலத்தில் கிடைத்தது. போர்த்துகேயர், ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் எங்கள் சமூகத்தினர் மீது அட்டூழியங்கள் நடந்தேறியபோது எங்களுக்கு அபயமளித்தவர்கள் அக்கால சிங்கள மன்னர்கள் என்பதை மறைக்க முடியாது. எங்களது மூதாதையர்கள் சிங்களப் பெண்மணிகளை திருமணம் செய்து வாழ்ந்துள்ளனர்.

இந்தக் கிண்டல் பேச்சினால் தமத் கையாள்களின் அடாவடித்தனத்தை நியாயப்படுத்தவே முயற்சித்தார் என்றே தோன்றுகின்றது. காசியப்ப மன்னரும் முஸ்லிம் பெண்ணொருவரை மணமுடித்திருந்திருந்தால் சீகிரிய மலைக் குன்றையும் உடைத்துத் தகர்த்திருப்பார்கள்.

தங்களது அடியாள்களைத் தப்பவைப்பதற்காக இவ்வாறு நிந்திக்கும் விதத்தில் இனவாதத்தை கக்குவது மிகவும் மட்டகரமான காரியமாகும். இவ்வாறு துவேமாக இனவெறியைத் தூண்டுவோருக்கு எதிராகக் கிளர்ந்தெழுவதற்காகவே நாங்கள் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்திருக்கின்றோம். – என்றார்.

## சிறுமியின் கையைப் பிடித்து

### தொலைபேசி இலக்கத்தைக் கொடுத்த ஐந்து இளைஞர்களுக்கு 30 வரை மறியல்

திருகோணமலை, சீனக்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சிறுமியொருக்குக் கையைப் பிடித்து தொலைபேசி இலக்கத்தைக் கொடுத்த கைகலப்பில் ஐவரை இம்மாதம் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதிவான் சமிலா குமாரி ரத்நாயக்க இன்று உத்தரவிட்டார்.

சீனக்குடா, கப்பல்துறை, சர்தாபுர பகுதியைச் சேர்ந்த 19, 21,18 மற்றும் 20 வயதுகளுடையே 5 இளைஞர்களே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் ஐவரும் இணைந்து கப்பல்துறை பகுதிக்குச் சென்றுள்ளனர். அங்கே வீதியில் நின்ற 15 வயதுடைய சிறுமியொருக்குத் தொலைபேசி இலக்கத்தை எழுதிக் கையைப்பிடித்து பெற்றுக்கொள்ளுமாறு திணித்துள்ளனர்.

சம்பவத்தை நேரில் கண்ட ஊர்வாசியொருவர் கூக்குரலிட்டு அனைவரையும் ஒன்று சேர்த்து சிறுமி நின்ற இடத்துக்குச் சென்று சந்தேகநபர்களிடம் விவரத்தைக் கேட்க சந்தேகநபர்கள் ஊர்வாசிகளைத் தாக்கி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்,


இதில் காயங்களுக்குள்ளான நபர் ஒருவர் திருகோணமலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

எனினும், ஊர் மக்கள் வழங்கிய தகவலின் பிரகாரம் 5 சந்தேகநபர்களையும் பொலிஸார் கைதுசெய்து திருகோணமலை நீதிமன்ற நீதிவான் இல்லத்தில் அவர் முன்னிலையில் இன்று ஆஜர்ப்படுத்தியபோதே விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## வாக்குப் பெட்டிகளைக் கொள்ளையிட்டால்

# சுடுங்கள் என இம்முறை என்னால் கூற முடியாது!

### தேசப்பிரிய தெரிவிப்பு



வாக்குப் பெட்டிகளைக் கொள்ளையிடவரும் நபர்களின் தலையில் துப்பாக்கியால் சுடுமாறு என்னால் இம்முறை கூற முடியாது.

– இவ்வாறு தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தற்போது தேர்தல் ஆணைக் குழுவில் மேலும் இரண்டு பேர் இருப்பதால், அவர்களிடம் கேட்டே துப்பாக்கியால் சுட முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொதுத்தேர்தல் தொடர்பில் பொலிஸாரே நடவடிக்கை எடுக்க வேண்டும். கடந்த முறை போல் என்னால் இம்முறை தனியாகத் தீர்மானங்களை எடுக்க முடியாது. நாங்கள் மூன்று பேர் இருப்பதே இதற்குக் காரணம். மூன்று பேரிடமும் கேட்ட பின்னரே எந்த இடத்தில் துப்பாக்கியால் சுட வேண்டும் எனக் கூற முடியும்.

வாக்குப் பெட்டிகளைக் கொள்ளையிட முயற்சிக்கும் எவரையும் சுடுங்கள். ஒன்றில் இருந்து பத்து வரை எண்ணி விட்டு சுட வேண்டும். உயிர்ச் சேதங்கள் ஏற்படும் படியான சம்பவங்களாக இருந்தால் உடனடியாகச் சுட வேண்டும்.

வாக்குப் பெட்டிகளைக் கொள்ளையிட வரும் நபரை எடுத்துச் செல்ல வேண்டாம் என முதலில் எச்சரிக்க வேண்டும். அதன்பின்னரே சுட வேண்டும் – என்றார்.

## 1,440 பேர் கைது!

நாட்டில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12 மணி முதல், நேற்று சனிக்கிழமை நள்ளிரவு 12 மணி வரையான 24 மணித்தியால காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது, பல்வேறு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் 1,440 பேர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள், ஆயுதங்கள், சட்டவிரோத மதுபானம் வைத்திருந்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இந்தச் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவர்களில் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட 209 பேரும், ஏனைய குற்றங்களை இழைத்த குற்றச்சாட்டில் 562 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் 239 பேரும், கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் 132 பேரும், ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 05 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆயுதங்கள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 04 பேரும், சட்டவிரோத மதுபானம் வைத்திருந்த குற்றச்சாட்டில் 289 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சுற்றிவளைப்புகளின்போது 12 துளை கொண்ட துப்பாக்கிகள் 05, நாட்டுத் துப்பாக்கிகள் 02 ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன. 6 ஆயிரத்து 289 லீற்றர் சட்டவிரோத மதுபானமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்தோடு, ஹெரோயின், கஞ்சா, ஐஸ் போதைப்பொருள் ஆகியனவும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.07.2020 இல் வெளியிடப்பெற்றது.